* 538 வினா—திரு. ஜி. ராமசாமி :

திரு. டி. சி. திம்மராய கவுண்டர் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், நாட்ராம்பள்ளியில் ஒரு பயணியர் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. ராமசாமி : தலைவரவர்களே, நாட்ராம்பள்ளிக்கு அருகில் பாலாற்றின் குறுக்கே புல்லூர் என்ற இடத்தில் 4½ கோடி ருபாயில் பெரிய அணை கட்டுவதாக இருக்கிறது. அந்த இடத்தில் அதிகாரிகள் வந்து தங்க, கிருஷ்ணகிரி, வாணியம்பாடி ஆகிய இரண்டு இடங்களில்தான் பயணியர் விடுதிகள் இருக்கின்றன ; இருபது, 25 மைல் தூரத்திற்கு இல்லாமல் இருப்பதால் அங்கு பயணியர் விடுதியை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, புல்லூர் அணைக்கு ஒப்பம் அளிக்கப்பட்ட பிறகு இதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

Loan faciliaties for farmers in the Nilgiris

* 539 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture, be pleased to state—

(a) whether the Indo-German–Nilgiris Project in the Nilgiris has opened a fund scheme to assist the small farmers; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) ஜெர்மன் கூட்டிணைவுக் குடியரசால் வழங்கப்பட்ட ரூ. 11 இலட்சம் தொகையைக் கொண்டு, நீலகிரி மாவட்டத்திலுள்ள சிறிய விவசாயிகளுக்கு பயிரிடுவதற்கு உதவும் பொருட்டு ஒரு குறுகிய காலக் கடன் திட்டத்தை செயல் படுத்தும் அமைப்பு ஒன்றிற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

1974 மார்ச் 21]

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, இது எப்பொழுது நடைமுறையில் வரும்? எப்பொழுது அமலுக்கு வரும்? இது வேறு இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, இது அமலில் இருந்து கொண்டு இருக்கிறது, 1971-லிருந்து. இண்டோ-ஜெர்மன் ப்ராஜக்ட் நீலகிரி மாவட்டத்திற்கு மட்டும்தான். இண்டோ-ஜெர்மன் ப்ராஜக்ட் பணத்தைக்கொண்டு அந்த மாவட்டத்திற்கு மட்டும் சிறிய விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கிறோம்.

திரு. எம். தேவராசன்: தலைவரவர்களே, சிறிய விவசாயிகள் என்றால் எத்தனை ஏக்கர் வைத்துள்ளவர்கள்? அதிக ஏக்கர் வைத்துள்ளவர்கள் கூட இந்தக் கடன்களைப் பெறுவதாகக் கேள்விப்படுகிறேன். அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: ஐந்து ஏக்கர் என்று நிர்ணயித்திருக்கிறோம். Farmers owning less than five acres அவர்களுக்கூட சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன. இதைவிடப் பெரிய விவசாயிகளுக்குக் கொடுப்பதாக மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தகவல் இருந்து, தனியாகக் கொடுத்தால் விசாரிக்கிறேன்.

திரு. ஏ. எம். இராஜா: தலைவரவர்களே, சிறிய விவசாயிகளுக்கும், பெரிய விவசாயிகளுக்கும் மத்திய வங்கிகள் அங்கேயுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் பயிர்க்கடன்கள், குறுகிய காலக் கடன்கள், மத்திய காலக் கடன்களைக் கொடுத்து வருகிறது. இண்டோ-ஜெர்மன் ப்ராஜக்ட் 11 லட்சம் ரூபாயை சிறிய விவசாயிகளுக்குக் கொடுப்பதாகச் சொல்கிறீர்களே, அதை நேரடியாகக் கொடுக்கிறீர்களா? அல்லது மத்திய வங்கியின் சொசைட்டிகளின் மூலம் கொடுக்கப்படுகிறதா? இல்லையென்றால் சொசைட்டிகள் மூலம் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, ஜெர்மன் அரசு கொடுக்கும் தொகையைக் கொண்டு சிறிய விவசாயிகளுக்குக் கொடுத்து வருகிறார்கள். அரசாங்கத்தின் மூலம்

[1974 மார்ச் 21

கொடுக்கப்படுவது இல்லை. இதற்கு வட்டி 2 சதவிகிதம். அந்த வகையில் நமது கூட்டுறவு வங்கியோ வேறு வங்கியோ கொடுப்பதாக இருந்தால் அதை எடுத்து நாமே நடத்தலாம்.

திருவள்ளூர் உதவிப் பொறியாளர் அலுவலகம்

*540 வினா—**திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூரில் செயல்பட்டுவரும் உதவி விவசாயப் பொறியாளர் அலுவலகம் (குழாய்க்கிணறுத் திட்டம்) தொடர்ந்து அங்கேயே செயல்பட அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

(இ) இங்கே பயன்படுத்தப்பட்ட போர் செட்டுக்கள் சில தஞ்சை மாவட்டத்திற்கு மாற்றப்பட்டது உண்மையா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, (இ) என்பதற்கு முதலில் சொல்கிறேன்.

(இ) ஆம். அனைத்து நாட்டு வளர்ச்சிக் கழகத்தில் குறிப்பிட்ட காலத் திட்டத்தின் கீழ், குழாய்க் கிணறுகளையும் வடிமுனைக் கிணறுகளையும் தோண்டுவதற்காக, திருவள்ளூர் சப்-டிவிஷனிலிருந்து 35 கைத்துளை கவிருகளும், 10 விசைத் துளைக் கருவிகளும் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

(அ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, நில நீரை அதிகமாகப் பயன்படுத்தும் செங்கற்பட்டு மாவட்டத்தில் திருவள்ளூர் வட்டம், பொன்னேரி வட்டம் ஆகிய வட்டங்களிலுள்ள ஏராளமான விவசாயிகள் திருவள்ளூரில் உள்ள இந்தத் துணை அலுவலகத்தின் மூலம்தான் பயன் பெறுகிறார்கள். ஆகவே, இந்த நேரத்தில் இந்தத் துணை அலுவலகத்தை மாற்றாமல் இருக்கவோ அல்லது அங்கேயிருந்து தஞ்சை மாவட்டத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட ஹாண்ட் போரிங் செட்டுகளை மறுபடியும் திரும்பக் கொண்டு வருவதற்கான நல்ல முயற்சிகளையோ செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.